விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 12.29 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 01.35 p.m.

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.I, Mettur

## Case No : M.C.No. 2/2024

**Petitioner side witness : ம.சா.1** **Date : 12.12.2024**

| | |
|---|---|
| **Name : ஹர்சனா** | **Taluk : மேட்டூர்** |
| **Husband Name : ஹரிபிரபாகரன்** | **Calling : –** |
| **Village : நங்கவள்ளி** | **Age : 27** |

(Petitioner and Respondent present.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எதிர்மனுதாரர் வீட்டில் எவ்வளவு நாள் நல்லமுறையில் இருந்தீர்கள் என்றால் 1 ½ மாதம் இருந்தோம். 1 ½ மாத காலத்தில் அப்போ எனக்கும், என் மாமியாருக்கும் சின்ன சின்ன சண்டை வரும். அதன் பின்னிட்டு சென்னை சென்றுவிட்டோம். சென்னையில் எவ்வளவு நாள் இருந்தீர்கள் என்றால் 7 மாதம் இருந்தோம். 7 மாதம் எந்த பிரச்சனையும் இன்றி நல்லமுறையில் தான் இருந்தோம் என்றால் சரிதான். 7 மாதம் கழித்து எப்போது கணவர் வீட்டிற்கு வந்தீர்கள் என்றால் வளைகாப்புக்கு வந்தோம். அப்பொழுது என் தந்தைக்கு போன் செய்து என்னுடைய பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் இல்லை. வளைகாப்பு முடிந்து 15 நாட்கள் என் பெற்றோர் வீட்டில் இருந்தேன். அதற்கு பின்னிட்டு என் கணவர் வீட்டிற்கு வந்து 15 நாட்கள் இருந்தேன். அச்சமயம் சோபாவில் உட்கார்ந்தால் கூட சோபாவில் உட்கார கூடாது என என் மாமியார் சொன்னார். நீ கீழே தான் உட்கார வேண்டும் என்று

பிரச்சினை செய்ததால் என் அப்பாவிற்கு போன் செய்து வரவழைத்து என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அப்போது எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் என் அப்பாவிற்கு போன் செய்து வரவழைத்து என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன் பின்னிட்டு நான் என் கணவர் வீட்டிற்கு வரவில்லை என்றால் சரிதான். குழந்தை பிறந்தபோது என் மாமனார், என் மாமியார், என் கணவர் அனைவரும் வந்து நல்லமுறையில் பார்த்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு என் கணவரின் உறவினர்கள் குழந்தையை வந்து பார்த்து சென்றார்கள் என்றால் சரிதான். அன்றைய தேதியில் புதியதாக ஒரு உறவினர் வந்தபோது என் அம்மா யார் அந்த புதிய உறவினர்கள் என்று கேட்டதற்கு ஏன் அவ்வாறு கேட்கிறீர்கள் என்று என் மாமியார் பிரச்சினை செய்தார்கள். அவ்வாறு குழந்தையை பார்த்துவிட்டு செல்லும் போது என் மாமியார் குழந்தையுடன் 45 நாட்கள் கழித்து வீட்டிற்கு வருமாறு சொல்லிவிட்டு சென்றார் என்றால் சரிதான். அப்பொழுது எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நான் வரமுடியாது என்று சொல்லிவிட்டேன். தேதி ஞாபகம் இல்லை. அதன் பின்னிட்டு என் கணவர் வீட்டிற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் குழந்தையை முதன் முதலில் 07.11.2022-ம் தேதியன்று எடுத்துச்சென்றோம். அவ்வாறு எடுத்துச்சென்றது என் கணவர் வீட்டில் இருந்து 30 நபர்கள் வந்து எங்களை அழைத்தன் பேரில் சென்றோம். ஆனால் அப்போது என் கணவர் எனது வீட்டிற்கு வரவில்லை. என்னிடம் தகவலும் சொல்லவில்லை. அப்பொழுது கணவர் வேலை பளு காரணமாக வரவில்லை என்று என்னிடம் சொன்னார்களா என்றால் வீட்டிற்கு வருவதற்கு முன்பு சொல்லவில்லை. வீட்டிற்கு வந்தபின்பு தான்

சொன்னார்கள். அந்த சமயம் என் கணவர் எங்கு வேலை செய்தார் என்றால் சென்னையில் வேலை செய்தார். அதற்கு பின்னிட்டு என் கணவர் குடும்பத்தினர் constipation–க்கு என்னை மருத்துவமனைக்கு அழைத்து செல்லாததால் எனக்கு திருமண ஏற்பாடு செய்த சுப்ரமணி என்பவர் என்னையும் என் குழந்தையையும் என் கணவர் வீட்டிலிருந்து அவரது வீட்டிற்கு அழைத்து சென்றார். அங்கிருந்து என் பெற்றோர்கள் வந்து அழைத்து சென்றார்கள். அதன் பின்னிட்டு என் மாமியார், மாமனார் என் கணவர் எப்போதும் என் வீட்டிற்கு வந்ததில்லை என்றால் சரிதான். 27.02.2023–ம் தேதியன்று என் கணவர், மாமனார் மற்றும் மாமியார் என் வீட்டிற்கு வந்தார்கள். எதற்காக வந்தார்கள் என்றால் நகை, பணம் கேட்டு வந்தார்கள். எவ்வளவு கேட்டார்கள் என்றால் ரூ.10 லட்சம் கேட்டார்கள். அவ்வாறு கேட்ட சங்கதியை நான் என் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு வந்தவர்களை நாங்கள் அவமானம்படுத்தி அனுப்பிவிட்டோம் என்றால் இல்லை. அதன் பின்னிட்டு கைகளைப்பு நடந்ததா என்றால் ஆமாம். என் மாமியாரும், என் கணவரும் என்னை அடித்துவிட்டார்கள். அதன் பின்னிட்டு நான் நங்கவள்ளி காவல்நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். ஆனால் அதில் எழுதப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. ஆனால் கையொப்பம் என்னுடையது தான். அந்த புகாரில் என் மாமியார், மாமனார் வரதட்சனை கேட்டதாகவோ, நகை பணம் கேட்டதாகவோ இல்லை என்றால் சரிதான். அதற்கு பிறகு விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். என் கணவர், என் மாமியார், மாமனார் அனைவரும் நங்கவள்ளி காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு வந்தார்கள் என்றால் ஆமாம்.

விசாரணையில் சமாதானம் செய்து அனுப்பி வைத்தார்களா என்றால் இல்லை. என்னுடைய நகையும், பணமும் திருப்பி தருவதாக சொன்னார்கள். என் கணவர் என்னை 3 மாதத்தில் வந்து அழைத்து சென்று தனிக்குடித்தனம் வைப்பதாக சொன்னார்கள். ஆனால் 3 மாத காலத்தில் அழைத்து செல்லவில்லை. தர்மபுரி குடும்ப நல நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ வேண்டும் என்று என் மீது வழக்கு தாக்கல் செய்தார். என் கணவரின் வீட்டிற்கு எப்போது வழக்கறிஞர் மற்றும் உறவினர்களை அழைத்து சென்றேன் என்றால் 22.09.2023–ம் தேதி அழைத்து சென்றேன். வழக்கு தாக்கல் செய்து எத்தனை நாட்கள் கழித்து அவ்வாறு அழைத்து சென்றீர்கள் என்றால் 2 மாதம் கழித்து சென்றேன். அப்படி செல்லும்போது என் கணவர் வீட்டின் கேட் மற்றும் கதவை உடைத்து உள்ளே சென்றோம் என்றால் இல்லை. அராஜகமாக, அதிரடியாக அத்துமீறி வழக்கை நிலுவையில் உள்ள போது எவ்வித உத்தரவும் இல்லாமல் நான் சென்றது தவறான செயல் என்றால் இல்லை. நீதிபதியின் உத்தரவின் அடிப்படையில் தான் சென்றோம். அந்த மாதிரி நீதிபதியின் உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் நீதிபதியிடம் என் கணவர் வீட்டிற்கு செல்கிறேன் என்று கேட்டதற்கு நீதிபதி அவர்கள் உன் கணவர் வீட்டிற்கு எப்போது வேண்டுமானாலும் செல்லாம் என்று சொன்னதால் நான் என் வழக்கறிஞரை அழைத்து சென்றேன். மொத்தம் எத்தனை காரில் சென்றோம் என்றால் 1 கார் தான். மொத்தம் எத்தனை பேர் சென்றீர்கள் என்றால் நான், எனது அப்பா, அம்மா, என் அண்ணன், எனது வழக்கறிஞர் மொத்தம் 6 பேர் சென்றோம். எனது கணவர் சேர்ந்து வாழ வேண்டும் என்று குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் நான்

வழக்கறிஞரை வைத்து பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் இடைக்கால ஜீவனாசம் கேட்டதால் தான் ஜீவனாசம் கேட்பதில் குறியாக இருக்கிறீர்கள் என்று உங்களுடைய கணவர் அந்த வழக்கை என் கணவர் Not Pressed செய்துக்கொண்டார் என்றால் ஜீவனாசம் எனக்கு கொடுக்க விருப்பம் இல்லை என்பதால் அவர் அந்த வழக்கை Not Pressed செய்துவிட்டார். என் கணவர் வீட்டிற்கு வழக்கறிஞருடன் சென்றபோது நான் தகராறு செய்ததால் தான் என் கணவர் வீட்டார் தர்மபுரி காவல்நிலையத்தில் புகார் அளித்தார்கள் என்றால் சரியல்ல. பொய் புகார் என் மீது அளித்தார்கள். தகராறு ஏற்பட்ட பின்பு தான் குடும்ப நல நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ தாக்கல் செய்த வழக்கு Not Pressed செய்யப்பட்டது என்றால் இல்லை. தகராறு ஏற்படுவதற்கு முன்பு வரை என் கணவர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று தான் இருந்தார் என்றும், தகராறு செய்ததால் தான் சேர்ந்து வாழவதற்கான சாத்திய கூறுகள் இல்லை என்று மனுவை Not Pressed செய்துக்கொண்டார் என்றால் சரியல்ல. என்னுடைய நகைகள் எல்லாம் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய பெயரில் நங்கவள்ளி தபால் அலுவலகத்தில் ரூ.10 லட்சத்திற்கு வைப்பீடு உள்ளது என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு இல்லை என்று சொல்கிறார். அது எவ்வளவு காலமாக உள்ளது என்றால் இல்லை. நங்கவள்ளி தபால் நிலையத்தில் யாருடைய பெயரில் அந்த தொகை வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் யாருடைய பெயரிலும் இல்லை. என்னை எப்போதாவது சமாதானம் பேச அழைத்தாரா என்றால் 26.12.2023–ம் தேதி அவருடைய வழக்கறிஞர் மூலம் என்னிடம் கேட்டார். நான் மறுத்து சேர்ந்து வாழுவதாக சொன்னேன். இந்த வழக்கில் நான் நஷ்டஈடு வேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான். சீர்

வரிசை பொருட்கள், சீர் செனத்தி, பண்ட பாத்திரங்கள், கட்டில், மெத்தை, பீரோ வகையறாக்கள் அனைத்தும் திரும்ப தரவேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான். அவைகள் அனைத்தையும் நான் திரும்ப வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதால் கேட்டேன் என்றால் இல்லை. என் மனுவில் எதிர்மனுதாரர் சென்னையில் பணியாற்றுவதன் மூலம் ரூ.1 லட்சம் சம்பளம் பெறுகிறார் என்று கூறியுள்ளேன். அவர் வேலைக்கு செல்லவில்லை என்றும், எவ்வித வருமானமும் இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் குடும்பத்திற்கு பல ஏக்கரில் சொத்துக்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். அதற்கான ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அந்த குடும்ப சொத்தின் மூலம் வருமானம் வருகிறது என்று சொல்லியுள்ளேன் அது எந்த வகையான வருமானம் என்றால் வாடகை வருமானம் வருகிறது. அதை எல்லாம் நான் நிரூபணம் செய்ய தயார் என்றால் தயாராக உள்ளேன். கையில் என் கணவர் ரொக்கமாக ரூ.50 லட்சம் வைத்துள்ளார் என்று கூறியுள்ளேன் என்றும், நான் அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சேர்ந்து வாழ கூறி எந்த பஞ்சாயத்தும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நல்ல கணவனாகவும், குழந்தைக்கு நல்ல தகப்பனாகவும் நடந்து கொண்டார் என்றும், நான் எவ்வித நியாமான காரணமும், முகாந்திரமும் இல்லாமல் தன்னிச்சையாக பிரிந்து வாழ்கின்றேன் என்றால் சரியல்ல. அதனால் எனக்கு எவ்விதமான ஜீவனாசமும் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 30.12.2023–ம் தேதி ஜீவனாசம் கொடுக்க சொல்லி பெரிய மனிதர்களை வைத்து பஞ்சாயத்து கூட்டி கேட்டேன் என்றும், எனக்கும், 2–ம் மனுதாரருக்கும், உணவு, உடை, உறைவிடம், மருத்துவ செலவு ஆகிய செலவுகளுக்கு ரூ.1

லட்சம் வேண்டும் என்று கேட்டு அவர் மறுத்துவிட்டதாக என் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தர்மபுரி தலைவர் வெற்றிவேல் அவர்களை வைத்து கேட்டதற்கு நாங்கள் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லிவிட்டார்கள். தலா ரூ.50 லட்சம் என்று விதத்தில் நான் கேட்டது தவறு என்றும், எதிர்மனுதாரரால் அவ்வாறு கொடுக்க முடியாது என்றும், நான் பெற அருகர் இல்லை என்றால் சரியல்ல. என் வாழ்க்கையை சீரழித்துவிட்டதாகவும், அதற்காக ரூ.1 கோடி நஷ்டஈடு கேட்டுள்ளது முறையல்ல என்றால் சரியல்ல. நகை, பணம் எல்லாம் என்னிடம் உள்ளது என்றும், சட்டவிரோதமாக நான் அதை கேட்கிறேன் என்றால் சரியல்ல. நான் B.A., B.Ed., படித்துள்ளேன் என்றும், எங்கு வேலைக்கு சென்றாலும் மாதம் ரூ.40 ஆயிரம் சம்பளம் கிடைக்கும் என்று சொன்னால் சரியல்ல. ரூ.5000/– தான் கொடுப்பார்கள். என்னுடைய அப்பாவிற்கு நிறைய சொத்துக்கள் உள்ளது என்றும், நிறைய வருமானம் உள்ளது என்றும், என்னுடைய பெற்றோர் வீட்டில் நான் சுகமாக வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா வேலைக்கு செல்லவில்லை. நான் குடும்பநல நீதிமன்றத்தில் இடைக்கால ஜீவனாசம் மனு தாக்கல் செய்ததில் எனக்கு ரூ.5000/– மட்டுமே ஜீவனாசமாக வழங்கப்பட்டது. அதை நான் பெற்றுக்கொண்டேன். அதன் மீது எந்த விதமான மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான் ஆனால் ரூ.5000/– கொடுத்த பின்பு அசல் மனுவை Not pressed செய்துக்கொண்டதால் நான் மேல்முறையீடு செய்யவில்லை. நான் எதிர்மனுதாரரிடம் பணம் பெறுவதிலேயே குறியாக உள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் மனஉளைச்சல் கொடுக்கவும், தொல்லை கொடுக்கவும், நான் வேலைக்கு

செல்லாமல், எதிர்மனுதாரரை மிரட்டி ஜீவனாசம் என்ற பெயரில் பணம் பெற இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் குடும்பத்தினர் எப்போதும் பணம், நகை பெறுவதில் குறியாக இருந்தார்கள் என்று நான் மனுவிற்காக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**